**மடுள்ள பிரதேச சபை**
**மொனறாகலை மாவட்டம்**

----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜூன் 20 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, மடுள்ள பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் கையேற்கப்பட்டிருந்த 02 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான 02 நீர் முன்மொழிவுத் திட்டங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 13,934,815 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மடுள்ள வாரச்சந்தையின் இறைச்சி மற்றும் 04 மீன் வியாபார கூடங்களை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 1,551,347 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மடுள்ள புதிய பேருந்து நிலையத்தின் கடைகளை பகிர்ந்து ஒதுக்குவதற்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 644,702 மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை.

(உ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் 2012 ஆம் ஆண்டின் போது பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட மடுள்ள நீர் முன்மொழிவுத் திட்டத்தின் செலவினம் இனங்காணப்பட்டு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அலுவலகத்திற்காக 02 கணனிகளை கொள்வனவு செய்வதற்காக மீயவாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 201,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) ரூபா 27,600 பெறுமதியான வீட்டு கழிவுப்பொருள் தொட்டி இருப்பொன்று நாட்குறிப்பு பதிவு மூலம் கடன் விற்பனையாக அறிக்கையிடப்பட்டிருந்தமையால் பெறவேண்டிய கணக்கு மற்றும் மிகை அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) முன்னைய ஆண்டுகளில் மூலதனமாக்கப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் அல்லாத ரூபா 40,195 ஆன உருப்படிகள் நாட்குறிப்பு மூலம் சரி செய்யும் போது திரட்டிய நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டமையால் அப்பெறுமதியால் திரண்ட நிதி குறைவடைந்திருந்தது.

(ஐ) மடுள்ள பல்நோக்கு கட்டிட நிர்மாண கைத்தொழிலுக்குரிய கணக்கிடப்பட்டிருந்த ரூபா 529,358 ஆன தாமதக் கட்டணங்கள் வருமானத்திற்கு எடுக்கப்படாமல் மீளாய்வாண்டின் நிர்மாணக் கடன்கொடுத்தோராக காண்பிக்கப்பட்டிருந்தது. இதனால் செலுத்த வேண்டிய செலவினம் அப்பெறுமதியால் கூடுதலாகவும் திரண்ட நிதி அப்பெறுமானத்தினால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

(i) பல வருட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 378,800 தொகையான கடை வாடகையை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 29,024 ஆன நிலுவை நீர்க் கட்டணங்களை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(iii) 2015 ஆம் ஆண்டிற்குரிய பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 96,030 மற்றும் 2016 ஆம் ஆண்டிற்குரிய பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 91,099 தொகை என்பவற்றை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட 09 நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 722,891 தொகையை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

### 1.3.3 இணக்கமின்மைகள்

#### சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் கைவிரலடையாளம் பதியும் இயந்திரம் பயன்படுத்தப்பட்டு உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளியேறல் உறுதிப்படுத்துவது தொடர்பான அறிக்கை பேணப்பட்டிருக்கவில்லை.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந் ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,883,402 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,224,531 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி மற்றும் வரி | - | 685,965 | 567,996 | 117,969 | 1,200,000 | 1,270,364 | 1,144,689 | 125,675 |
| வாடகை | 5,332,260 | 5,320,664 | 5,320,664 | - | 5,325,369 | 5,309,433 | 5,309,433 | - |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 517,500 | 761,734 | 761,734 | - | 383,100 | 455,072 | 455,072 | - |
| ஏனைய வருமானம் | 11,745,350 | 3,922,532 | 3,922,532 | 1,247,599 | 10,574,500 | 1,148,676 | 1,148,676 | 1,564,293 |
| மொத்தம் | **17,595,110** | **10,690,895** | **10,572,926** | **1,365,568** | **17,482,969** | **8,183,545** | **8,057,870** | **1,689,968** |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

2017.12.31 இல் மொத்தமாக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 10.6 மில்லியனாக இருந்ததுடன் ஆண்டில் 10.5 மில்லியன் சேகரிக்க கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 1.3 மில்லியன் வருமானம் சேகரிப்பதற்கு இருந்ததுடன், முன்னைய ஆண்டுன் ஒப்பிடும் போது நிலுவை வருமானம் 19 சதவீத்தினால் குறைவடைந்திருந்தது.

#### 2.2.3 ஏனைய வருமானம்

(அ) சபைக்குச் சொந்தமான பெக்கோ லோடர் இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியமைக்கான மீளாய்வாண்டிற்குரிய ரூபா 109,700 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் சபையினால் விளம்பர அறிவித்தல்களை காட்சிப்படுத்துவதற்காக உப விதிகளின் பிரகாரம் கட்டணங்களை அறவிடுவது பகிரங்கப்படுத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 135,000 கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆண்டிற்குரிய ரூபா 82,930 ஆன நிலுவை நீர்க்கட்டணத்தை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 256,082 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 1,178,647 ஆக இருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 23 பிரதான விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

பிறப்பிக்கப்பட உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக உப விதிகளைப் பிறப்பித்து கழிவுப்பொருள் வரி அறவிட்டு மீளாய்வாண்டில் கழிப்பொருள் முகாமைத்துவ செலவினத்தை மீள்நிரப்பியிருக்கவில்லை.

#### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் பிரகாரம் சபை தெரிந்துகொள்ளாமையால் அந் நோக்கங்களுக்கான உலகலாவிய குறிகாட்டிகள் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே 25 ஆந் திகதி அளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2. செயற்பாட்டு வினைத்திறனின்மை

(அ) சபைக்குச் சொந்தமான வர்த்தக கடைத் தொகுதி மற்றும் பேருந்து நிலையத்தின் 24 கடைகள் 2016 ஆம் ஆண்டு முதல் மதிப்பீடு செய்யப்பட்டு குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த ஆதனங்கள் கேள்வியின் போது அறிவித்தல்கள் 03 மொழிகளிலும் பிரசித்தப்படுத்தப்படாதிருந்ததுடன், அதற்காக பத்திரிகை விளம்பரம் மேற்கொள்ளும் போது மொனறாகலை மாவட்டத்தில் குடியிருப்பவர்களிடமிருந்து மாத்திரம் கூறுவிலை கோரப்பட்டமையால் வழங்குனர்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தனர்.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.3.1 பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளாமை

21 கிராமிய வீதிகளை பராமரிப்பதற்காக கிராமிய விவசாய வீதிகளை பராமரித்தல் நிதியத்தின் மூலம் 2012 திசெம்பர் 26 ஆந் திகதி கிடைத்த ரூபா 500,000 தொகை பயன்படுத்தப்படாமல் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக சேமிப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

#### 3.3.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

சபையினால் உடமை கொண்டுள்ள 09 காணித் துண்டுகள் மற்றும் 35 மயானங்களின் உரித்தை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.3.3 விளைவற்ற / குறைப்பயன்பாட்டிலான சொத்துக்கள்

(அ) 2013 ஆம் ஆண்டில் சபையினால் ரூபா 624,133 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஒபேகொட புதிய நூலக கட்டிடம் மற்றும் அதற்காக கொள்வனவு செய்த மற்றும் நன்கொடையாக கிடைத்த ரூபா 195,695 பெறுமதியான 588 நூலக புத்தகங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) கழிவுகளை வேறுபடுத்தி சேகரிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்ததாக கிடைத்த ரூபா 28,704 பெறுமதியான 20 லீற்றர் அளவிலான 104 கழிவுப்பொருள் கூடைகள் 4 ஆண்டு காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,071,918 செலவில் நிர்மாணிக்கப்பட்ட வாகன சேவை நிலையமும் அதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 123,325 தொகையான உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

சபையிடமிருந்த ZA 3922 ஆம் இலக்க பெக்கோ லோடர் இயந்திரம் விபத்திற்கு உட்பட்டமையால் ஏற்பட்ட ரூபா 49,900 ஆன நட்டத்தை காப்புறுதி கம்பனியிடமிருந்து மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் திருத்த வேலைகளுக்காக ரூபா 39,900 செலவினம் சபை நிதியத்தால் செலவிடப்பட்டிருந்தது.

### 3.5 பெறுகைகள்

#### 3.5.1 பெறுகை திட்டம்

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையினால் வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.2 வழங்கல் மற்றும் சேவைகள்

பிரதேச சபையினால் விதந்துரைப்புக்கள் தயாரிக்கப்படாமல் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.5.3 ஒப்பந்த நிர்வாகம்**

(அ) 01/2017 ஆம் இலக்க அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பான வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் சமூக சங்கங்களுக்கு வழங்கப்படும் நிர்மாணங்களை மீண்டும் உப ஒப்பந்தம் வழங்கக்கூடாதென ஒப்பந்த உடன்படிக்கையில் நிபந்தனை உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதி கொங்கிரீட் இடும் நிர்மாண வேலைகளில் வீதியைப் பதப்படுத்தப்பட வேண்டுமென்பது மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் மூலம் மதிப்பிடப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் உள்ளபடியான வருமானம், செலவினங்களுக்கிடையே கருத்திற் கொள்ளக்கூடிய விலகல்களின் பிரகாரம் வருமான மற்றும் செலவினக் கட்டுப்பாட்டின் போது பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**05 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) முறையாக மதிப்பீடு செய்யாமை<br>(ii) காணியைக் கையேற்க நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (ஆ) கணக்கீடு | (i) காணி மற்றும் கட்டிடங்கள் கணக்கீடு செய்யப்படாமை<br>(ii) அட்டுறு செலவினம் கணக்கீடு செய்யப்படாமை<br>(iii) பெறவேண்டிய மீதிகள் கணக்கீடு செய்யப்படாமை. |
| (இ) வருமான நிர்வாகம் | (i) நிலுவை வருமானம் அறவிடப்படாமை<br>(ii) அனுமதிக் கட்டணங்கள் அறவிடப்படாமை |